பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 06 வெள்ளிக்கிழமை 22.12.2023 கதிர் 406

# இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டும் இல்லையேல் சர்வதேசத்தை நாடத் தயங்கவே மாட்டேன்

## ஜனாதிபதியை மிரட்டிய சம்பந்தன்



சர்வதேச ஒப்பந்தமான இலங்கை, இந்திய ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தாது தொடர்ச்சியாக காலம் இழுத்தடிக்கப்பட்டுச் செல்லப்படுமாயின் நானும் இலங்கைப்பிரஜை என்பதை மறந்து ☞ 2

## இது ரகசியம் அல்ல!

வடக்குகிழக்குதமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நடத்திய பேச்சுக்களில் பெருமளவான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைமைத்துவ வேட்பாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியின்தலைவர்க.வி.விக்னேஸ்வரன், ஜனநாயகக் கூட்டணியின் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், தமிழ் அரசுக் கட்சியின் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. ☞ 2

## 4 வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம் - நெல்லியடி பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதல்நடவடிக்கையில் 4வாள்கள்மீட்கப்பட்டுள்ளதுடன்ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

நெல்லியடி மாலுசந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று தீவிர தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது வீட்டில் இருந்து நான்கு வாள்களும் சட்டவிரோதமான சிகரெட் பெட்டிகளுகளும் மீட்கப்பட்டது.

உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் 38 வயதான சந்தேகநபரொருவரும் ☞ 2

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

# அடுத்த நாடாளுமன்றிலே புதிய அரசமைப்பு முயற்சி

### ஒருவருடத்துக்குள் பூர்த்தி செய்து அதிகாரங்களைப் பகிரவும் தயாராம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பகிர்வுஉள்ளிட்டவிடயங்களை புதிய நாடாளுமன்றமே கையாள முடியும். புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டதும் ஒருவருடத்துக்குள்அதிகாரங்களைப் பகிர்வதற்கு தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள்மத்தியில்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களைபிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது நல்லிணக்கம்உள்ளிட்ட பலவிடயங்கள்தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது. காணி,மீள்குடியமர்த்தல், நல்லிணக்கத்திற்கு அமைவாக சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழக அகதி முகாம்களில் இருக்கும் இலங்கையரின் பிரச்சினைகள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில்சாத்தியமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பில்நீதி மற்றும்சிறைச்சாலைகள் மறுசீரமைப்புஅமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன், எஸ்.ராசமாணிக்கம், ஜீ.கரு ☞ 2

# கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டம் அடுத்தாண்டு தொடக்கம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கிராமியமட்டத்லான பொருளாதாரத்தை மேம்படுத்தும்வேலைத் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்கப்படும் என்று என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுதலைவர்களுடன் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயேஜனாதிபதிரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் ☞ 8

# போதைப் பொருள் வர்த்தகத்தை ஒடுக்குவதில் அமைச்சர் தீவிரம்

### எத்தகைய அழுத்தம் வந்தாலும் நடவடிக்கை தொடரும்

நாட்டில் போதைப் பொருள்வர்த்தகத்தையும் பாதாளஉலகசெயற்பாடுகளையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க முழு ஆதரவு வழங்கியுள்ள நிலையில் எத்தகையஅழுத்தங்கள் வந்தாலும் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்என்றுபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'யுக்திய' என்ற ☞ 2

# தென்னக்கோனை பதவி நீக்க சட்டத்தரணிகள் வலியுறுத்து

### ஜனாதிபதிக்குக் கடிதம்

பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் தேசபந்து தென்னகோனின் நியமனத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி சட்டத்தரணிகள் கூட்டிணைவுஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஜயம்பதி விக்ரமரத்ன, எம்.ஏ.சுமந்திரன், சாலிய பீரிஸ், உபுல் ஜயசூரிய, ஏர்மிஸாரீகல், ஜெஃப்ரி அழகரட்ணம் உள்ளிட்ட பலரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்சட்டத்தரணிகள் கூட்டிணைவு ☞ 9

# ஏ.எல். விண்ணப்பங்களை இன்று வரை திருத்தலாம்

கா.பொ.த. உயர்தரப் பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரத்தில் திருத்தங்களை மேற்கொள்ளப்படுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இன்று நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைபரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும ஜனவரி 4ஆம் திகதி இடம்பெறவுள்ள கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குதோற்றவுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது அனுமதி பத்திரத்தில், மொழி, பிறந்ததிகதிமற்றும் ☞ 2

# மழையால் 6700 பேர் பாதிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 2033 குடும்பங்களைச் சேர்ந்த 6738 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 40வீடுகள்பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மதியத்திற்குப் பின்னர் இருந்து கடும் மழைகொட்டித் தீர்த்தது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகாரணமாக ஆதிகபட்சமாக, சங்கானை பிரதேச செயலக பிரிவில் 783 குடும்பங்களைச்சேர்ந்த 2683பேரும், கோப்பாய் பிரதேசசெயலகபிரிவில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேரும், ஊர்காவற்துறைபிரதேச செயலாளர் பிரிவில் 310 ☞ 2

# யாழ். தேவி தடம் புரண்டது வடக்குக்கான சேவை பாதிப்பு

யாழ். தேவி கடுகதி தொடரு;து தடம் புரண்டதால் வடக்கிற்கான சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கல்கிஸை நோக்கி புறப்பட்ட யாழ். தேவி கடுகதி தொடருந்து நேற்று இரவு 7 மணியளவில் மஹவ தொடருந்துநிலையத்தில் தடம் புரண்டதால் வடக்கு பாதையின் தொடர்ந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பண்டிகை காலத்தை முன்னிட்டு மலையகத்துக்காக நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொடருந்து திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, விசேட தொடருந்து சேவைகள் கொழும்பு கோட்டை - பதுளை, கண்டி ☞ 8

# இன்றுடன் விடுமுறை

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்றுடன் நிறைவு செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்றாம்தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள், அடுத்தவருடம்பெப்ரவரி மாதம்முதலாம்திகதிமீள ஆரம்பிக்கப்படவுள்ளன. உயர்தரப் பரீட்சை காரணமாக மூன்றாம் தவணையானதுஇரண்டு கட்டங்களாக விடுமுறை வழங்கப்பட்டு கற்றல், கற்பித்தல் செய்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றுள்ளது.

# பொருளாதார மேம்பாட்டுக்கான இளைஞர்களின் பணி காத்திரம்

### சாகல ரத்நாயக்க பாராட்டு

நாட்டின்பொருளாதார மேம்பாட்டிற்காக இளைஞர் யுவதிகள் முன்னெடுக்கும் பணிகள் காத்திரமானவை என்று தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இளம் தலைவர்களைப்பாராட்டுவதற்காக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றாடலுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும்போது இளம் சமூகத்தினரைப் பொறுப்புகள் ☞ 2

## இனி இது .....

சம்பந்தன், சாணக்கியன், கருணாகரன், கலையரசன் ஆகியோரே கலந்துகொண்டனர்.

கூ-ட்டத்தில் அடுத்த தேர்தல் வரையில் எந்தத் தீர்வு முயற்சியும் மேற்கொள்ளப்படப்போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். அடுத்த தேர்தலில் மக்கள் ஆணை கிடைத்தால் ஒரு வருடத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவார் என்றும் தெரிவித்தார். கூட்டத்தில் பேசிய சம்பந்தன் வழக்கம் போல 1956இல் தொடங்கி பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்று ஒரு நீண்ட உரையை ஆற்றினார். ரணில் அமைதியாக அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார். பதில் ஏதும் கூறவில்லை. கூட்டத்தில் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதால் சர்ச்சைக்குரிய எந்தவிடயமும் இடம்பெறவில்லை.

.............

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தான் தெரிவு செய்யப்பட்டால் 5 வருடகாலம் மட்டுமே பதவியில் இருப்பேன் என்று தலைமைப்பதவிக்குப்போட்டியிடும் சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். காரைதீவில் இடம்பெற்ற கட்சியின் 75ஆவது பிறந்த நாள் நிகழ்வில் தெரிவித்திருக்கிறார். தனக்கு இப்போது 60 வயது என்றும் கட்சித் தலைமையைப் பொறுப்பேற்றால் 65 வயதில் விலகிவிடுவார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஏன் இந்த முடிவு என்று அவர் சொல்லவில்லை. ஆனால், கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் போன்றோ கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா போன்றோ பதவிக் கதிரைகளில் கடைசி வரைக்கும் ஒட்டிக்கொண்டிருக்கும் மோசமான அரசியலைத் தான் செய்யமாட்டார் என்று உணர்த்துவதற்காகவோ என்னவோ அவர் இந்தக் கூற்றைத் தெரிவித்துள்ளார்.

பொறுத்திருந்து பார்ப்போம் என்னதான் நடக்கிறது என்று.

..........................

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல மாவட்ட அமைப்பாளர் அமித்த பண்டார என்பவர் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். ரம்புக்கன பகுதியில் போதைப் பொருளுடன் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதையடுத்து அவரை அமைப்பாளர் பதவியில் இருந்து உடனடியாக அப்புறப்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தி, அவரைக் கட்சியை விட்டே தூக்கிக் கடாசியும் விட்டது என்று கட்சியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்தினை நாடுவேன் என்று ஜனாதிபதி ரணிலுக்கு எச்சரித்தார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே சம்பந்தன் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்து தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக கருத்துக்களை வெளியிட்டபோது, அடுத்த வருடத்தில் புதிய நாடாளுமன்றம் உருவாகிய தன் பின்னர் அந்த நாடாளுமன்றம் ஒருவருட காலப்பகுதிக்குள் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் தற்போதைய நாடாளுமன்றத்தினுள் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவழங்குவது தொடர்பில் கரிசனைகளைக் கொண்டிருப்பதாக ஜனாதிபதி கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு நாங்கள் தடையாக இருக்கப்போவதில்லை.

அதேநேரம், பெருந்தலைவர் சம்பந்தன் முக்கியமானதொரு விடயத்தினைக் கூறினார். இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்தவேண்டும். இரண்டு நாடுகளுக்கு இடையில் சர்வதேச ரீதியாகச் செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காது விட்டால், தான் ஒரு இலங்கை குடிமகன் என்பதைத் தாண்டி, சர்வதேச சமூகத்தினை நாடுகின்ற சூழலுக்குள் தள்ளிவிடாதீர்கள் என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்திருக்கின்றன. தற்காலத்தில் சுற்றாடலுக்கான இளைஞர்களின் அர்ப்பணிப்பு பாராட்டுதற்குரியது. அத்தோடு உலகளாவிய கால நிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்காக இலங்கை முன்நின்று செயற்பட வேண்டியது அவசியமாகும்.

மீள்புதுப்பிக்கத் தக்க வலுசக்தி துறைக்குள் இலங்கையின் கொள்ளளவு முக்கியமானது. பசுமை மற்றும் நவீன பொருளாதாரத்திற்கான ஜனாதிபதியின் கரிசனை முக்கியமானது. நெருக்கடி நிலையிலிருந்து மீள எழுவதற்கான முயற்சிகளின் போது முகம்கொடுக்க நேர்ந்த சவால்களைப் போன்று நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளும் தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக இளைஞர் யுவதிகள் முன்னெடுக்கும் பணிகள் காத்திரமானவை. அதற்கான ஒத்துழைப்புக்களுக்காக நன்றிகளைத் தெரிவிப்பதோடு சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்ப ஆளும் தரப்புக்கு நிலையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதமைக்காக பினூஜ அமரநாயக்க உள்ளிட்ட லியோ கழகத்தினருக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு, எதிர்காலத்தில் இளைஞர் யுவதிகளுக்கு இது போன்ற வாய்ப்புக்கள் அதிகளவில் உருவாகும்.

அதேபோல் நாட்டின் முன்னேற்றத்துக்காக இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை நேரடியாக பெற்றுத்தரும் லியோ கழகம் போன்ற வேலைத்திட்டங்களை ஊக்குவிக்கின்றமைக்காக பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட கல்வித்துறைனருக்கும் பாராட்டுக்கள் என்றார்.

## 4 வாள்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக நடவடிக்கைக்காக நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## ஏ.எல். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் என்பவற்றை இணையவழி ஊடாக திருத்திக்கொள்வதற்கு முடியும்.

அதற்கான அவகாசம் இன்று நள்ளிரவு வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே பரீட்சைக்கு விண்ணப்பதித்து அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் தங்களது அனுமதிப்பத்திரத்தையும், அடையாள அட்டையையும் ஒப்பீடு செய்து மீள் பரிசீலனை செய்துகொள்வது பொருத்தமானதாகும்.

அவ்வாறு தவறுகள் காணப்படுமாயின் திருத்தங்களை இறுதிநேரம் வரையில் காத்திருக்காது உடன் மேற்கொள்ள வேண்டும். அதற்கான இறுதி சந்தர்ப்பம் இன்று வழங்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

## மழையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களை சேர்ந்த 940 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 117 குடும்பங்களை சேர்ந்த 439 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணாகரன், டீகலையரசன், குலசிங்கம் திலீபன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.இம்.சீ.எம்.ஹேரத், சுற்றாலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ.ஹேரத் உள்ளிட்டவர்களும் நல்லிணக்கம் தொடர்பிலான நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நாடாளுமன்றத்திற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட விடயங்களை கையாள்வதற்கான மக்கள் ஆணை கிடையாது. ஆகவே மக்கள் ஆணை பெற்ற புதிய நாடாளுமன்றத்திலேயே அந்த விடயங்கள் கையாளப்படும். புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு ஒருவருட காலத்திற்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும். அதற்கு முன்னதாக, 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள விடயங்களை முன்னகர்த்துவதற்கான சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

இந்தச் சந்திப்புச் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களினதும், தமிழ்த் தேசத்திலும் காணப்படுகின்ற நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வுகாண போருக்கு பின்னரான காலத்தில் கூட முயற்சித்திருக்கின்றோம். அந்த விடயத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் புத்துயிரும், உத்தரவும் வந்திருக்கின்றது.

இவ்வாறான நிலையில் காணி, அபிவிருத்தி, மக்கள் மீண்டும் வருகை தந்து குடியேற்றம் செய்யப்படுதல் உள்ளிட்டவற்றில் முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

13ஆவது திருத்தச்சட்டம், காணமலாக்கப்பட்டவர்கள் போன்ற விடயங்கள் இன்னமும் இருக்கின்றன. இந்த விடயங்கள் உலக நாடுகளில் கூட தீர்வினை எட்டுவதற்கு அதிகளவான காலங்களை எடுகின்ற விடயங்களாக உள்ளன.

அதேநேரம், தற்போதைய நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இன்மையின் காரணமாக அடுத்த நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பினை உருவாக்கி அதன் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என்றார்.

## போதைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயரில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நடவடிக்கை குறித்து தற்போது நாடு முழுவதும் பேசப்படுகிறது. இந்த நாட்டில் போதைப்பொருள் வர்த்தகமும் பாதாள உலக செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. இவற்றை யாராவது நிறுத்தவேண்டும். எனவே இதனை நிறுத்த தீர்மானித்தேன். அதற்காகத்தான் 'யுக்திய' சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் சமூக பொலிஸ் குழுக்களுக்கும் விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைவெற்றியடைய மக்களின் ஆதரவும் குறிப்பாக ஊடகங்களின் ஆதரவும் அவசியம். முப்பது வருட யுத்தம் வடக்கு கிழக்கில் மாத்திரமே இருந்தது. ஆனால் தற்போதுள்ள இந்த யுத்தம் நாடு பூராகவும் பரவியுள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டுவர பொதுமக்கள் வழங்கும் ஆதரவு பாதுகாப்புத் துறைக்கு பெரும் பலமாக அமைந்துள்ளது.

இதற்குத் தேவையான ஆதரவையும் சரியான தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தால் அடுத்த வருடம் ஜூன் மாதத்திற்குள் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒழிக்கமுடியும் என நான் நம்புகிறேன்.

கடல் மார்க்கமாக இந்நாட்டுக்கு போதைப்பொருள் கொண்டு வருவதைத் தடுக்க விசேட செயல்திட்டமொன்றை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர். முதலில், நாட்டில் இயங்கும் போதைப்பொருள் விநியோக வலையமைப்பை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பாதாள உலக செயற்பாடுகள் நிறுத்த வேண்டும்.

மூன்றாவதாக, போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். போதைக்கு அடிமையானவர்களுக்குப் பதிலாக போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை வழங்கினேன்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய 4,665 பேர் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் எமக்குகிடைத்துள்ளன. இவர்கள் அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டுள்ளேன். கடந்த 04 நாட்களில் மாத்திரம் புலனாய்வுத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 731 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலனாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக 8,451 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 346 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 61 பேர் சொத்து விசாரணைக்காகவும், 697 பேர் புனர்வாழ்விற்காகவும் அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த 04 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 431 மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா, ஹஷிஸ், ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட பெருந்தொகை போதைப்பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களுக்கு சொந்தமான வாகனங்கள், வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களின் பெறுமதி சுமார் 162 மில்லியன் ரூபாவாகும். எனவே, இதன் ஊடாக இந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமைந்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு கைப்பற்றப்படும் அனைத்துப் பொருள்களையும் நீதிமன்றம் மூலம் அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த பணிகளை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினேன். போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதியும் உள்ளார்.

எனவே ஜனாதிபதியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகள் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் நிறுத்தப்பட மாட்டாது. அதேபோன்று, இதனை ஒரு வாரத்துடன் நிறுத்தாது தொடர்ந்து செயல்படுத்துவோம். இந்நாட்டில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட்டு, எதிர்கால சந்ததியினர் அச்சமோ சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழலை நாம் உருவாக்குவோம்.

சிறுவர்கள், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இந்த முறைகேடுகளைத் தடுக்கும் வகையில், எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் இருந்து பாதுகாப்புத்துறைக்கு அவசர தொலைபேசி எண் ஒன்றை அறிமுகப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளேன். எனவே, இந்த விசேட தொலைபேசி எண்ணின் கீழ் பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். பெரும்பாலும் பெண்கள் தங்கள் பிரச்சினைகளை ஆண் பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் கூறத் தயங்குகிறார்கள்.

எனவே, 24 மணி

தொடர்ச்சி 9ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# காற்றாலையும் கனிய மணல் அகழ்வும் மன்னார் மாவட்டத்தை சீர்குலைக்கிறது

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப் பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக்கடிதத்தில்மேலும்குறிப்பிடுகையில்-

மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதி என்பது சாதாரண தரைத்தோற்றத்தில் இருந்து மிகவும் குறைவான தாழ் நிலப் பிரதேசம் ஆகும். வலிமை குறைந்த கனதியற்ற நொதியமுள்ள தீவு என்பதால் தான் மூன்று மாடிக்கு மேல் கட்டடம் அமைப்பதற்கு மன்னார் தீவு பகுதியில் அனுமதி வழங்குவதில்லை. ஐம்பது ஆண்டுகளில்நலிவுறும்தீவுகளில்மன்னாரும் ஒன்று என ஏலவே யுனெஸ்கோ நிறுவனம் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தது.

அவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை அமைப்பதும் கனிய மண் அகழ்வதும் என்பது மேலும் தீவு பிரதேசத்தை பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

உலகம் முழுவதும் மனிதர்களின் இயற்கைக்கு எதிரான செயற்பாட்டால் புவி வெப்பமயமாதல் அதிகரிப்பால் காலநிலை மாற்றம் ஏற்படுகிறது.

இதனால் பேரிடர் மூலம் கடல் நீர் மட்டம் உயரலாம். அதனால் பல தீவுகள் காணாமல் போகலாம் என்றும் அறிவியலாளர்களால் எச்சரிக்கப்பட்டுள்ளமையும்கவனிக்கத்தக்கது. டுபாய் காலநிலை மாநாட்டில் தாங்களும் பங்கேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிலஅதிர்வு, சுனாமியோ, பெருவெள்ளமோ ஏற்பட்டால் தற்காத்துக் கொள்ளக்கூடிய நிலையில் வலிமையிழக்கவைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

காற்றாலையும் கனிய மண் அகழ்வும் ஆழமாக துளையிட்டு நிலத்தடியை அதன் இயற்கை தரைத்தோற்ற இருப்பியல் ஒழுங்கமைப்பை சீர்குலைக்கும் வேலையே நடைபெறுகிறது.

இங்கு மிக நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு பெரும் வாழ்வியல் கேடாக மாறும். இயற்கையை அழித்து இயல்பை மாற்றி பணம் தேட முயல்வது தற்கொலைக்குச் சமமானது ஆகும். இங்கு வாழும் மக்களைப் பற்றிய எந்த விதமான நோக்கு நிலையும் இல்லாமல் ஆதாயம் தேட நினைப்பது அரசியல் இழுக்காகும்.

எனவே காலப்போக்கில் மன்னார் தீவு பகுதியில் இருந்து மனிதர்களை அப்புறப்படுத்தும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகவே நாம் இதனை நோக்க வேண்டியுள்ளது.

வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு பல்தேசிய கம்பனிகளுக்கு மன்னார் வளத்தை கூறு போட்டு பெரு வணிகர்களிடம் கை அளித்திருப்பது நாட்டிற்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்து-வதுடன் பூகோள ரீதியாக இந்த நாட்டின் மீது பிராந்திய வல்லரசுகளின் கழுகுப் பார்வைக்குள் அகப்பட்டிருப்பதாலும் வரலாற்று முக்கியத்துவ துறைமுக கட்டமைப்பைக் கொண்டதுமான இத்தீவு எதிர்காலத்தில் நாட்டின் ஏகபோகத்துவத் திற்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.



இந்த யதார்த்தங்கள் தங்களுக்குப் புரியாமல் அல்ல. ஆகவே கனியவள அகழ்வை முழுமையாக நிறுத்துவதுடன் புதிதாக அமைக்க இருக்கும்.

காற்றாலையை மன்னார் தீவுக்கு வெளியில் எவருக்கும் பாதிப்பு இல்லாத இடத்தில் நிறுவலாம். எனவே பொதுமக்களின் உணர்வுபூர்வமான தத்துவார்த்த அடிப்படை இருப்பியல் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை அறிவியல், சமூகவியல் ரீதியாகவும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். இல்லையேல் பொதுமக்கள் தமது ஜனநாயக வழி எதிர்ப்பை இடைவிடாது வெளிப்படுத்துவார்கள்.

மக்களிடமுள்ள நீதி பூர்வமான வாழ்வியல் உரிமை சமூக சமநீதி கோட்பாட்டை ஏற்றுணர்ந்து கொள்வீர்கள் என்றும் எமது நியாயமான வேண்டுகையை நிராகரிக்க மாட்டீர்கள் என நம்புகின்றோம். என குறித்த கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.அதன் பிரதி இந்திய உயர்ஸ்தானிகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (05)

# நாட்டில் போதைப் பொருள் பாவனையை 6 மாதங்களுக்குள் இல்லாமல்செய்யலாம்

## பதில் பொலிஸ் மா அதிபர் நம்பிக்கை

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம்நாள் சுற்றிவளைப்புகளில் 2296 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இதனிடையே எதிர்வரும் 6 மாதங்களுக்குள் நாட்டில் போதைப்பொருள் பாவனையை முற்றாக இல்லாமல் செய்ய முடியும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முப்படைகளின் ஒத்துழைப்புடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் முன்னெடுக் கப்பட்டிருந்தது. இந்த விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம் சுற்றிவளைப்புகளில் 2,296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 6,583 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவற்றுள் செவ்வாய்க் கிழமை இரவு புளுமெண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் ஹெரோயின், ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தமை, சட்டவிரோத மதுபானம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஹொரனை பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொரியர் சேவையூடாக போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்து வந்த யாழ்.பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட மாணவர் ஒருவர் கைது செய்-யப்பட்டுள்ளார். சியம்பலாவெள பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கோப்பாய் பிரதேசத்தில் வைத்து இவ்வாறு கைது செய்-யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து இதன்போதுவெவ்வேறுவகையான போதைப்பொருள் மாத்திரைகளும் பறிமுதல் செய்-யப்பட்டுள்ளன. மேலும் 18 ஆயிரம் போதைப்பொருள் மாத்திரைகளுடன் மீனவர்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 109பேருக்குஎதிராகதடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன் 14 சந்தேக நபர்கள் தொடர்பில் சட்டவிரோத சொத்து குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 184 பேர் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் தேடப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 218 சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இதன்போது ஒரு கிலோ 170 கிராம் ஹெரோயின், 648 கிராம் ஐஸ், 11 கிலோ 600 கிராம் கஞ்சா, 46 கிலோ 285 கிராம் மாவா மற்றும் 19,507 போதைப்பொருள்மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# அரச பதவிகள் என்பது வியாபாரமல்ல மக்கள் சிந்தித்துச் செயற்படுவார்கள்

## சுசில் பிரேமஜெயந்த நம்பிக்கை

அரச பதவிகள் என்பது வியாபாரமல்ல. சிலர் மக்களால் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாட்டுக்கு சேவையாற்ற முடியும் என நினைக்கிறார்கள்.



அவ்வாறு செய்ய முடியாது என்பது கடந்த இரண்டுவருடத்துக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டது. எனவே மக்கள் இது தொடர்பில் சிந்தித்து சரியானவர்களை மக்கள் தெரிவு செய்வார்கள் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அடுத்த வருடம் பிரதான இரண்டு தேசிய தேர்தல்கள் இடம்பெறும். மக்கள் சரியாக தீர்மானிக்கிறார்கள் என நினைக்கிறேன். போதிய முன் அனுபவம் இல்லாமல் துறைசார்ந்த முதிர்ச்சி ஒன்றுமில்லாமல் இந்த துறையில் பணியாற்ற முடியாது.

இவ்வாறானவர்களின்தலைமைத்துவத்தால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம். நகரசபை மற்றும் மாநகர சபைகளில் கூட என்ன நடக்கிறது என்பது இவர்களுக்குத் தெரியாது.

அவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் நிலவில் முயல் பார்ப்பதை போன்றே செயற்படுவார்கள்.

அவ்வாறான தரப்பினரே நாட்டில் காணப்படும் உயரிய பதவிகளை வகிப்பதற்கு எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான நபர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் எத்தனை நாள்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருக்கிறார்கள் என்பதை பாருங்கள்.

நாடாளுமன்றத்தில் தமது கடமைகளை உரிய முறையில் செய்ய முடியாத ஒருவரால் எவ்வாறு உயரிய பதவிகளை பெற்றுக் கொண்டு அதனை திறம்பட செய்ய முடியும். அரசபதவிகள் என்பது வியாபாரமல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாட்டுக்கு சேவையாற்ற முடியும் என நினைக்கிறார்கள். அவ்வாறு செய்ய முடியாது என்பது கடந்த இரண்டு வருடத்துக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

எனவே மக்கள் இது தொடர்பில் சிந்தித்து தீர்மானிக்க வேண்டும் மக்கள் சரியானவர்களைத் தெரிவு செய்வார்கள். மக்கள் சரியாக தீர்மானிக்கிறார்கள் என நினைக்கிறேன். - என்றார். (05)

# 2 ஆம் கட்டமாக 50 கோடி டொலர் நிதியை விடுவித்தது உலக வங்கி

*அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முன்னேற்றகரமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அடுத்து இலங்கைக்கான நிதியுதவியில் இரண்டாம் கட்டமாக 500 மில்லியன் டொலர்களை உலகவங்கி விடுவித்துள்ளது. இலங்கையின் வரவு, செலவுத்திட்டத்துக்கு ஆதரவளிக்கக்கூடிய 'மீளெழுச்சி, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான அபிவிருத்தி கொள்கை செயற்திட்டத்துக்கு' கடந்த ஜூன் மாதம்28ஆம்திகதிஉலகவங்கி அனுமதியளித்தது. நுண்பாகப்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்தல், வறிய மற்றும் நலிவுற்ற சமூகங்கள் மத்தியில்ஏற்படக்கூடியதாக்கங்களைக் குறைத்தல்,அனைவரையும்உள்ளடக்கிய தனியார்துறைமீட்சிக்கு ஒத்துழைத்தல் ஆகியவற்றுக்கு உதவக்கூடிய-வகையிலான தொடர் உதவித் திட்டங்களில் முதலாவது திட்டம் இதுவாகும்.*

*இந்தத் திட்டம் வழங்குவதாக இணக்கப்பாடு எட்டப்பட்ட நிதி விடுவிக்கப்படுவதற்கு முன்பதாக நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகள் மற்றும் அடையப்படவேண்டியஇலக்குகளைக் கொண்டிருக்கின்றது.*

*அதன்படி இத்திட்டத்தின் கீழான முதற்கட்ட நிதியாக 250 மில்லியன் டொலர்கள்ஏற்கனவேவிடுவிக்கப்பட்ட நிலையில், அரசாங்கத்தால் திருப்திகரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட பரந்துபட்ட மறுசீரமைப்புக்கள் பற்றிய மதிப்பீட்டை அடுத்து இரண்டாம் கட்டமாக 500 மில்லியன் டொலர் நிதியை உலகவங்கி விடுவித்திருக்கின்றது.*

*'பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்துவதற்கு மாத்திரமன்றி, தனியார்துறை வளர்ச்சி மற்றும் நிலைமாற்றம் ஆகியவற்றுக்கும் பொருளாதார மற்றும் கட்டமைப்பு ரீதியான தொடர் மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும்.*

*அதன்படி உலகவங்கியின் இந்த உதவி செயற்திட்டம்பொருளாதாரத்தின் முழுமையான மீட்சியை உறுதிப்படுத்தல், பொருளாதார வளர்ச்சி இயலுமையை மேம்படுத்தல், தனியார்துறை முதலீடுகளை ஊக்குவித்தல் போன்றவற்றுக்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதில் அரசாங்கத்துக்கு உதவுகின்றது. - என உலகவங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர் ஃபாரிஸ் எச்.ஹடாட்-ஸேர்வோஸ் தெரிவித்துள்ளார். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புளித்துப்போன கதை

வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நடத்திய பேச்சில் தீர்வுக்கான புதிய அரசமைப்பு அடுத்த ஆண்டு தேர்தல்களின் பின்னரே கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார். தற்போதுள்ள ஆளும் தரப்புக்கு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மக்கள்ஆணைஇல்லைஎன்பதால்அடுத்ததேர்தலில் அந்த ஆணையை மக்களிடம் பெற்ற பின்னரே தீர்வு குறித்துப் பேசப்படும் என்கிற சாராம்சத்தில் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அதற்கிடையில் அரசமைப்பின் 13ஆவது திருத்ததையொட்டி சில பல திருத்தங்கள், அதாவது மாகாணத்திற்கு வழங்கப்பட்ட பின்னர் மத்தியினால் திரும்பபப் பெறப்பட்ட அதிகாரங்களை மீளக் கையளிக்கும் வகையிலான சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படும்என்றும்அவர்தெரிவித்திருக்கிறார்.

தள்ளாத வயதில் சக்கர நாற்காலியில் அமர்ந்து இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனுக்கு இது நிச்சயம் பெரும் ஏமாற்றமாக இருந்திருக்கும் என்பது நிச்சயம். தனது காலத்திற்குள் இனப் பிரச்சினைக்கு ஏதோ ஒரு வகையில் தீர்வு காணப்படவேண்டும் என்று அவர் விரும்பினார். அதனாலேயே நேற்றைய கூட்டத்திற்குக்கூட சக்கர நாற்காலியில்அமர்ந்து பெரும் சிரமத்திற்கு மத்தியில் வருகை தந்திருந்தார்.

அவரைப் போன்றே தனதும் சம்பந்தருடையதும் காலத்திற்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார். எனினும் இப்போது சம்பந்தர் உடல் நிலை தளர்ந்திருக்கும் நிலையிலும் தீர்வுக்கான எந்த முயற்சிகளையும் அவர் எடுக்கவில்லை. அதுமட்டுமல்ல, தற்போதுள்ள ஆளும் தரப்புக்குத் தீர்வைக் கையாள்வதற்கான மக்கள் ஆணை இல்லை என்று கூறும் ரணில்தான், தான் அதிகாரத்திற்கு வந்ததும் ஒரு சில மாதங்களில் – சுதந்திர தினத்திற்கு முன்பாக – தீர்வு வழங்கப்படும் என்று அறிவித்தபோதும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போகின்றார் என்று அனைத்துக் கட்சிக் கூட்டங்களை எல்லாம் நடத்தியபோதும் தனக்கும் தனது ஆளும் தரப்புக்கும் மக்கள் ஆணை இல்லை என்பது அவருக்கு ஞாபகத்திற்கு வந்திருக்கவில்லை. இப்போதுதான் அது ஞாபகத்திற்கு வந்திருக்கின்றது என்பது துரதிர்ஸ்டமே.

ஆளும் தரப்பின் பிரதான பங்காளியான பொது ஜன பெரமுன, பொருட்களின் பெறுமதி சேர் வரியை (வற்) 18 சதவீதமாக உயர்த்துவதை விரும்பாதபோதும் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்திற்கு அதன் ஆதரவைப் பெற்று நிறைவேற்றத் தெரிந்த ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மட்டுமே மக்கள் ஆணை இல்லை என்று காரணம் சொல்ல விளைகின்றார்.

அவரது இதுபோன்ற ஏமாற்றுக் கதைகளைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போய்விட்டது. தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான ஒரு உத்தியாக அவர் தீர்வு முயற்சிகளை அடுத்த தேர்தலிலும் பயன்படுத்துவாராயின் அது மக்கள் மத்தியில் கடும் கோபத்தையும் விரக்தியையுமே ஏற்படுத்தும். அவர் இப்போது கூறுவதைப் போன்றே 2015ஆம் ஆண்டும் புதிய அரசமைப்பு ஊடாகத் தீர்வு வழங்கப்படும் என்று சம்பந்தரையும் தமிழ் மக்களையும் நம்ப வைத்து ஏமாற்றியிருக்கிறார். எனவே மீண்டும் ஏமாறுவதற்கும் அவரது புளித்துப் போன கதைகளை நம்புவதற்கும் தமிழ் மக்கள் தயாராக இல்லை.




# காலத்தின் கட்டாயம்

**என் சத்தியமூர்த்தி**




சென்னையில் நடைபெற்ற 'ஜீ தமிழ்' தனியார் தொலைகாட்சியின் 'சரிகமப' பாட்டுப் போட்டியில், யாழ்பாணம் அரியாலையைசேர்ந்தகில்மிஷா என்ற மாணவி முதலிடத்தில் வந்திருக்கிறார். வாழ்த்துக்கள். அவரது வெற்றியை அரியாலை தொடங்கி, யாழ்பாணம் மற்றும் புலம்பெயர்இலங்கைதமிழர்கள் அனைவரும் கொண்டாடி வருகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

கில்மிஷாவின் வெற்றியின் பின்னால் அவருக்கு என்று கடவுள் கொடுத்த குரல் வளம் உள்ளது. அவரது அயராத முயற்சியும் அதற்கும் அதிகப்படியான பயிற்சியும் இருந்தன. அது போன்றே, அவருக்கு உற்சாகம் அளித்த பெற்றோர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எந்த நாடு ஆகட்டும். எந்த மக்களாகட்டும், நன்றாகப் படித்து, நல்லவேலைக்குதங்கள் பிள்ளைகள் போக வேண்டும் என்றேஎந்தவொருபெற்றோரும் நினைப்பர். இலங்கை தமிழர் குடும்பங்களில்இதுஒருசாபக்கேடு என்ற அளவிற்கு இருந்தது.

இனப்பிரச்சினை மற்றும் இனப்போருக்கு, நல்ல படிப்பு மற்றும் அரச வேலை குறித்த கடந்ததலைமுறைத்தமிழர்களின் வெறித்தனமான எதிர்பார்ப்புகளே முக்கியகாரணம். 'கோழிபிடிக்கும் வேலையாக இருந்தாலும் கொர்னமேந்து வேலையாகத்தான் இருக்கோணும்' என்ற வசனம் அந்த காலத்திய தமிழர் மனநிலையை எடுத்துரைப்பது. ஆனால், அந்த கோழி பிடிக்கும் வேலைக்கும், ஆணோ, பெண்ணோ, தங்களது பிள்ளைகள் (மட்டும்) ஏ-லெவல் தேர்வுகளில் நாட்டிலேயே முதன்மையாக வந்திருக்க வேண்டும் என்பதும்கூட அந்த தலைமுறை பெற்றோர்களின் அசைக்கமுடியாத எதிர்பார்ப்பு.

அந்த வகையில், இன்று உலகெங்கிலும் பரவியிருக்கும் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்கள் அந்தந்த நாட்டு மொழிகளை கற்றுத் தேர்ந்திருக்கிறார்கள். ஆனால், உள்நாட்டில் பெருவாரியான மக்கள் பேசும் சிங்கள மொழியை படிக்கமாட்டோம் என்று உறுதியாக இருந்தார்கள். அதற்கு சிங்களத்திணிப்பும்ஒருகாரணம். அல்லது, ஒரே காரணம். ஆனால், அந்த முயலுக்கு மூன்றே கால் பிடியினால், தமிழ் இனம் சாதித்தது என்ன?

இன்று அந்த அளவிற்குப் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு இல்லைதான். என்றாலும், தங்களுடைய பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும். தேர்வுகளில் நல்ல பெறுபேறுகளை பெறவேண்டும் என்பது மட்டுமே இன்னமும் அவர்கள் விரும்பும் விடயம். தற்கால குழந்தைகளுக்கு விளையாட்டு, பாட்டு போன்ற துறைகளில் என்னதான் வாய்ப்புகள் இருந்தாலும், அது அவர்களுக்கு இரண்டாம் பட்சம்கூட அல்ல என்பதே உண்மை.

**இரண்டுங்கெட்டான்நிலை**

இவ்வாறு, படிப்பிற்கும் வேலைவாய்ப்பிற்கும் மட்டுமே தமிழர் தலைமுறையினர் முக்கியத்துவம் கொடுத்து வருவதற்கு காரணம் என்ன? வறட்சி பிரதேசம் என்று அறியப்பட்ட யாழ்பாணம் பகுதியை தங்களது கலாசார கேந்திரம் என்றுபிரகடனப்படுத்திக்கொண்ட தமிழ் தலைமுறையினர், மாதம் தோறும் நிலையான வருமானத்திற்கு விவசாயம் சாராத வேலைவாய்ப்பே அவசியம் என்பதில்தெளிவாகஇருந்தார்கள்.

அதற்குதேவை, கல்விஅறிவு. அதை விட முக்கியம், முதனிலை பணிகளுக்குஅவசியமானதேர்வு மற்றும்பெறுபேறு சான்றிதழ்கள். எப்போதுஒருநிரந்தரவேலையில் தங்கள் பிள்ளைகள் சேர்ந்து விட்டார்களோ, அப்போதே அவர்களது எதிர்கால சந்ததிகளின் வெற்றிகளும் பொருளாதார முன்னேற்றமும் உறுதி செய்யப்பட்டு விட்டதாகவே அவர்கள் கருதினார்கள். இங்கேதான்தமிழர் தலைமுறையினரின் எதிர்காலம் குறித்த குழப்பமான மனநிலை வெளிப்பட்டது. தங்களது எதிர்காலம் குறித்த கனவுகளுக்கு கல்வி மட்டுமே அச்சாரம் என்று கருதிய அவர்களே, 'சிங்களம் மட்டும்' என்ற மொழிசார்ந்த அரச கொள்கையை எதிர்த்து அதனை இனப்போர் என்ற அளவிற்கு கொண்டு சென்று நிறுத்தினர். தமிழ்சமுதாயத்தின்தற்போதைய இரண்டுங்கெட்டான் நிலைக்கு, அந்த தலைமுறையினரின் குழப்பமான மனநிலையும் அணுகுமுறையுமே காரணம்.

இதற்கு,அன்றைய-இன்றைய தமிழ்அரசியல்தலைமைகளைக் குறை கூறுவதா, அல்லது, சமூதாயக் கட்டமைப்புகளை குற்றஞ்சாட்டுவதா, அதுவும் இல்லை. ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தையே விமர்சிப்பதா? வார்ப்படம் பிடித்து ஒரே அச்சில் செய்து எடுத்த ஒவ்வொருயாழ்பாணதமிழனும் அடுத்தவரின் பிரதிபலிப்பே. எனவே, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். அதனால்,ஒருவருக்குத்தோன்றிய எண்ணமே அடுத்தவருக்கும் தோன்றியது. ஒருவருக்கு சரி-தவறு என்றுபட்டது அனைவருக்கும் அவ்வாறே தெரிந்தது.

இந்தக் கலவையில் இருந்து பிறந்தவர்களே அந்த காலத்திய தமிழ் சமுதாயத்தின் சமூக-அரசியல் தலைவர்கள். ஆங்கிலேய ஆட்சிகாலத்தில் பிரித்தானியாவிற்கு சென்று மேற்படிப்பு படித்ததால் அவர்களில் சிலருக்கு பிற யாழ்பாண (வெள்ளாளர் இன) தமிழர்களைவிட சிறிது நீளமாகவே கொம்பு முளைத்திருந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க..)

# போதைப்பொருள்களுடன் இருவர் சம்மாந்துறையில் வைத்து கைது

சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்ட போதை ஒழிப்பு சுற்றி வளைப்பின் போது 6640 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 260 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன .அத்தோடு சந்தேகத்தின் பெயரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தவை வருமாறு -

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸ் திணைக்களத்தின் விசேட செயற்திட்டத்திற்கு அமைவாக சம்மாந்துறை பொலிஸாரால் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறையில் உள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தை அன்டிய பகுதியில் சம்மாந்துறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது போதை விற்பனையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என சம்மாந்துறை பெருங்குற்றவியல்பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே. சதீஸ்கரன் தெரிவித்தார்.

இவரை கைது செய்த போது இவரிடம் 6600 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் ,260 போதை மாத்திரைகள் அத்தோடு இன்னும் ஒருவரிடம் 40 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள்கைப்பற்றப்பட்டதுடன் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் தங்காலையில் போதைப்பொருளுடன் கைது

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்ஒருவர்போதைப்பொருளுடன் தங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தங்காலை பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடையவராவார்.

பொலிஸாரால் குடாவெல்ல மீன்பிடித்துறைமுகபகுதியில்மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 2 கிராம் 400 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய வழக்குகளுடன் தொடர்புடையவர்எனபொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவர் கூரிய ஆயுதங்களால் பெண்ணொருவரையும் நபரொருவரையும் தாக்கி காயப்படுத்தியுள்ளார் எனவும் வீடொன்றை உடைத்து 4 லட்சம் ரூபாபெறுமதியானபொருள்களை திருடியுள்ளார்எனவும்பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புதிய ராணுவ பதவி நிலை பிரதானி கடமைகளை புதன் பொறுப்பேற்றார்





புதிய இராணுவ பதவி நிலை பிரதானியாக கஜபா படையணியின் மேஜர் ஜெனரல் டபிள்யூ.எச்.கே.எஸ். பீரிஸ் புதன்கிழமை இராணுவத் தலைமையகத்தில் உள்ள தனது புதிய அலுவலகத்தில் 'மகா சங்க' உறுப்பினர்களின் 'செத்பிரித்' பாராயணங்களுடன் நடைபெற்ற நிகழ்வின் போது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது பிரதி பதவி நிலை பிரதானி உட்பட சிரேஷ்ட அதிகாரிகள், இராணுவ பதவி நிலை பிரதானி அலுலகத்தின் பணிநிலை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் கலந்துகொண்டனர். (05)

# மொரட்டுவையில் பெண் மாயம் தகவல் திரட்டும் பொலிஸார்

மொரட்டுவை பிரதேசத்தில் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் என மொரட்டுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போனவர் மொரட்டுவை , ராவதாவத்தை பிரதேசத்தை சேர்ந்த 59 வயதுடைய ஷாமலி பொன்சேகா என்ற பெண்ணாவார்.

இவர் கடந்த டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி அன்று மாலை 5.45 மணியிலிருந்து காணாமல் போயுள்ளார்.

இவர் காணாமல் போன சந்தர்ப்பத்தில் பச்சை நிற மேல் சட்டை மற்றும் நீல நிற காற்சட்டை அணிந்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 077 719 7053 , 077 232 7053 மற்றும் 077 925 4457 என்ற தொலைபெசி இலக்கங்களுக்கு உடனடியாக தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வெள்ளம் ஏற்படும் பகுதியிலுள்ள மக்களின் பாதிப்புகளை நிவர்த்திக்க மாற்றுத்திட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



வெள்ள பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மாற்றுத்திட்டமொன்ற வகுத்து புதிய வீட்டுத் திட்டத்துடன் கூடிய காணிகளை வழுங்குவது தொடர்பில் ஆராயவுள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மக்கள் முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப பாடசாலை மற்றும் கண்டாவளை மாகாவித்தியாலயம் ஆகியவற்றில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்ட போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அலத் தெரிவிக்கையில் -

வெள்ள அனர்த்தம் ஏற்படும் பகுதியில் உள்ள மக்களின் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் வகையில், மாற்றுத்திட்டமொன்றை வகுத்து புதிய வீட்டுத்திட்டத்துடன் பாதுகாப்பான இடத்தில் காணிகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்த பாதிப்பு குறைவடைந்த பின்னர் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதன் பின்னர் வீடுகளுக்கு செல்ல முடியும். - எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதனிடையே மழை வெள்ளத்தை முகாமைத்துவம் சரியாக இல்லாமையால் வருடாவருடம் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருவதாக விவசாய மக்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் கடந்த 2018 ஆம் ஆண்டு துறைசார் நிபுணர்களின் கவலையீனத்தால் இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறப்பதில் தாமதமேற்பட்டிருந்ததாகவும் அதன்பின்னர் நிலைமையை புரிந்துகொண்ட அதிகாரிகள் அவசர அவசரமாக வான் கதவுகளை திறந்துவிட்டமையால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் உயிரிழப்புகளும் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டியிருந்த அமைச்சர் இவ்வருடம் அவ்வாறான ஒரு நிலை இல்லாதுவிட்டாலும் பெரு வெள்ளத்தால் மக்கள் பாதிப்புற்றுள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிளிநொச்சியில் தற்பொழுது பெய்துவரும் தொடர் மழை காரணமாக இரணைமடு பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால், கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள், இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால், அக்கிராம மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், 28 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் இடம்பெயர்ந்து, இந்நிலையில் கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப பாடசாலையில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டிய அத்தியாவசிய தேவைகள் குறித்து அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். (05)

# நெல்லியடியில் பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் விற்ற இளைஞன் கைது

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி, இரண்டு நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றில் அனுமதி பெற்று, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

பாடசாலைக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் ஹற்றன் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் வேலை செய்து வந்துள்ளார்.

குறித்த இளைஞன் கடையில் வைத்து போதைப்பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டு வருவதாக நெல்லியடி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் குறித்த இளைஞனை கைது செய்த பொலிஸார் அவரது உடைமையில் இருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டு இருந்தனர்.

விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் இளைஞனை முற்படுத்திய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், சந்தேகநபரை இரண்டு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி என மன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட மன்று, சந்தேகநபரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதித்துள்ளது.

பொலிஸ் காவலில் சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் சந்தேகநபருடன் போதைப்பொருள் விற்பனை வலையமைப்பை சேர்ந்தவர்களை இனம் கண்டுள்ளதாகவும், சந்தேக நபரிடம் போதைப்பொருளை வாங்கிவந்தவர்களையும் இனம் கண்டுகொண்டுள்ளதாகவும், அவர்களையும் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## கிராமிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 3 வருடங்களாக மத்திய அரசினதும்மாகாணசபைகளினதும் மூலதனச் செலவுகள் மேற்கொள் ளப்படவில்லை. இதனால் கிராமிய பொருளாதாரம் பெரும் சரிவை சந்ததித்து. கிராமியமட்டத்திலானபல வேலைத்திட்டங்களும் முடங்கின. சுற்றுலாத்துறையும் சரிவை சந்தித்தது.

அதனால்மாவட்டமற்றும்கிராமிய மட்டத்திலான பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தைநாம்ஆரம்பிக்கவுள்ளோம். அடுத்த வருடத்தில் இந்நாட்டுக்கு வருகைத்தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் வருகை தந்தவர்களின் எண்ணிக்கைக்கு நிகரானதாக அமையக்கூடும்.

கீழ்மட்டபொருளாதாரத்தைமீளக் கட்டியெழுப்பவேண்டும். அதற்காக இம்முறை விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தை ஒதுக்கியுள்ளோம். அதனை அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்போம். பிரதேச மட்டத்திலான பிரநிதிகளுடன் கலந்துரையாடி அபிவிருத்திக்கான யோசனைகளைப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல் மலைநாட்டு வேலைத்திட்டம் ஒன்றும் உள்ளது. மாவட்டங்களுக்கு வழங்கப் பட்ட நிதிக்கும் மேலதிகமாக மலை யகத்திற்கு வழங்கப்படும். இன்னும் 05 - 06 வருடங்களுக்கு மலையக பகுதிகளின் அபிவிருத்திக்காக அந்த தொகை வழங்கப்படும். மலையக பகுதியில் அபிவிருத்தி குன்றிய தமிழ், சிங்கள கிராமங்களின் மேம்பாட்டிற்காகவே அதனைச் செய்கிறோம்.

அதற்கு மேலதிகமான மாகாண சபைகளுக்கும் நிதி ஒதுக் கப்பட்டுள்ளது. அமைச்சுக்களுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன நிதியும் உள்ளது. வெளிநாட்டுஉதவிகளுடன் முன்னெடுக்கப்படும் பல வேலைத்திட்டங்களும் உள்ளன. அதனை செயற்படுத்துவதற்கான தடைகளைநீக்கிகீழ்மட்டத்திலிருந்து வசதிகளை பெருக்க வேண்டும்.

அதற்கு மேலதிகமான காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதி பத்திரங்களை வைத்திருப்போருக்கு காணி உரிமத்தை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெ டுக்கப்படுகிறது. எனக்கு கிடைத்திருக்கும்தரவுகளுக்கமைய 20 இலட்சம் குடும்பங்கள் அதற்கு தகுதி பெற்றுள்ளன.

இது இலகுவான பணியல்ல. அதன் முதற்கட்ட வேலைத்திட்டம் 05 ஆம் திகதி தம்புளையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் மாவட்ட மட்டத்தில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். அதற்காக ஒரு மாவட்டத்தில் ஒரு பிரதேச சபையை தெரிவு செய்து அந்த பணிகளை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கிறோம். அந்த பணிகள் மார்ச்மாதமளவில்ஆரம்பிக்கப்படும்.

அதேபோல்விவசாயநவீனமயப் படுத்தல் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும். அதற்காக மத்தியஅரசாங்கம்மாற்றும்மாகாண சபைகளை இணைத்துக்கொண்டு அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய புதிய வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.


மேற்படி பணிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உரிய குழுக்களின் ஊடாக கீழ்மட்ட தலைவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம். மூன்று வருடங்கள் தாமதமாகிய அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒரே தடவையில் ஆரம்பிப்பது இலகுவானதல்ல. எவ்வாறாயினும் வெளிநாட்டு கடன்களின் கீழ் பல்வேறுவேலைத்திட்டங்களையும் மீளஆரம்பிக்கஎதிர்பார்த்துள்ளோம்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# மிருசுவில் படுகொலை நினைவு அனுஷ்டிப்பு





தென்மராட்சி-மிருசுவில் பகுதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட எட்டு பொதுமக்களுடைய 23 ஆவது நினைவு தினம் புதன்கிழமை மிருசுவில் பகுதியில் அனுஸ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் மேற்படி நினைவேந்தல் மற்றும் படுகொலை செய்யப்பட்டோரின் குடும்பத்தினருக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

மேற்படி நிகழ்வில் சமூகசேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவிப் பொருள்களை வழங்கி வைத்தார்.

கடந்த 20-12-2000 ஆம் ஆண்டு சிறுவர்கள் உட்பட 8 பேரை இலங்கை இராணுவம் கூரிய ஆயுதங்களால் குத்திப் படுகொலை செய்திருந்த நிலையில் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிக்கு 2015 ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 25ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அவர் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## போதைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரமும் 9 இயங்கும் இந்த செயற்பாட்டு அறையில், பெண் காவலர்களை மாத்திரம் பணியமர்த்தப்படுவார்கள். இது தவிர, தமிழில் முறைப்பாடுகளை அளிக்கக்கூடிய வகையில் மேலுமொரு புதிய எண்ணை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## கிராமிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவை ஒரே வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அல்ல.05 -06 வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த திட்டங்கள். இருப்பினும் நாம் இவை அனைத்தையும் ஒரே முறையில் ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அதற்காக அனைத்து அதிகாரிகளினதும் ஒத்துழைப்பு அவசியம். அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பும் அவசியம். அரசியல் பிரதிநிதிகளின் யோசனைகளும் ஆலோசனைகளும் அவசியம்.

இதன்போது அனைத்து பிரதமச் செயலாளர்களும் மாவட்டச்செயலாளர்களும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் ஒரே குழுவாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

பிரதேச அரசியல் தலைமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழுக்கள் அமைத்து, குழுவின் வேலைத்திட்டங்களை ஒருக்கிணைப்புச் செய்வதற்கான தலைவராக எம்.பி ஒருவரை நியமிக்க வேண்டும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்களும் அதற்குள் உள்வாங்கப்படுவர். அதன்படி தங்களது பிரதேசங்களில் நடக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான மேற்படி தரப்பினர் ஒற்றுமையாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அந்த பணிகளை ஆளுநர், பிரதமச்செயலாளர்கள், புதிய மாவட்ட குழுக்களின் தலைவர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் இணைந்து மாதாந்த பணிகளை மேற்பார்வை செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

இந்த பணிகளில் இறுதி அம்சமாக இவற்றின் பலன் மக்களை சென்றடைய வேண்டும். கிராமங்களுக்கு நிதி கிடைக்க கூடியவாறு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அதேநேரம் கிராமிய பொருளாதாரத்தையும் ஊக்குவிக்க வேண்டும். கிழக்கு மாகாணம், தம்புளை, கொழும்பை மையப்படுத்தி சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தும் பட்சத்தில் கிராமிய பகுதிகளிலும் குறிப்பிட்டளவு அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

அதேபோல் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டத்துடன் அடுத்த இரு வருடங்களில் விவசாய உற்பத்திகள் உயர்வடையும். அதனால் போட்டித்தன்மையுடன் கூடிய விவசாயத்தை கட்டியெழுப்ப இடைக்கால பிரதிபலன்களை கிராமிய பொருளாதாரத்திற்கு வழங்க எதிர்பார்க்கிறோம். அதனால் கிராமிய பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தி மேற்படி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்களை சார்ந்துள்ளது.

இதன்போது தீர்வுகான முடியாத பிரச்சினைகளை பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் குழுவிடம் சமர்பித்து அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு தீர்வு கிட்டாத பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவையில் ஆலோசிக்க தீர்மானித்துள்ளோம் என்றார்.

## தென்னக்கோனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அனுப்பியுள்ள அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2011ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நபரொருவரைக் கைதுசெய்து தன்னிச்சையாகத் தடுத்துவைத்து, சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும், எனவே அதற்குப் பொறுப்பாளிகளான தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 4 பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபருக்கு தமது சொந்தப் பணத்தில் நட்டஈடு செலுத்தவேண்டுமெனவும் டிசெம்பர் 14 உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ்வாறானதொரு பின்னணியினைக் கொண்ட பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அப்பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று நாம் கோருகின்றோம். அதுமாத்திரமன்றி சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபர் ஊடாக ஆராய வேண்டும். நாட்டின் ஜனநாயக உறுதிப்படுத்தலானது, சட்டத்தின் ஆட்சியை உறுப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் தேசபந்து தென்னக்கோனின் நியமனம் மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது என்றுள்ளது.

## சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி





வெள்ள அனர்த்தம் காரணமாக தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதி மற்றும் சாவகச்சேரி மகிழங்கேணி பிரதேசங்களைச் சேர்ந்த 50 குடும்பங்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில் அவர்களுக்கான புதன்கிழமை இரவு நேர உணவை சட்டத்திற்கும் மனித உரிமைக் குமான நிலையம் வழங்கி வைத்துள்ளது. இடம்பெயர்ந்தவர்கள் நாவற்குழி அற்புத அன்னை சன சமூக நிலையத்திலும்-சீயோன் தேவாலயத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில் இரவு நேர உணவு வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பில் பணிகளை பொறுப்பேற்றார் இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஷ் ஜா



இந்தியாவின் மூத்த இராஜதந்திரியான சந்தோஷ் ஜா இலங்கைக்கான அடுத்த உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், புதன்கிழமை கொழும்பை வந்தடைந்தார்.

இலங்கையுடனான சுதந்திர வர்த்தகஒப்பந்தபேச்சுகளில்முக்கிய பங்கை ஆற்றியிருந்த இராஜதந்திரி சந்தோஷ் ஜா, இலங்கையில் இறுதி போர் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு இந்திய திட்டங்களுக்கும் தலைமைதாங்கியுள்ளார்.

அனைத்து துறைகளையும் உள்ளடக்கியவகையில்இலங்கை - இந்திய புதிய இணைப்புகள் குறித்து டெல்லி கூடுதல் ஆர்வம் செலுத்தியுள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றல் சக்தியை மையப்படுத்திய குழாய் இணைப்புகள் தொடர்பில் இலங்கையுடன் பேச்சுகள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும்திருகோணமலையில் இந்தியா திட்டமிட்டுள்ள உத்தேச ஆற்றல் சக்தி மையம் தொடர்பான விடயங்களும், திருகோணமலை துறைமுக அபிவிருத்தி திட்டமும் இரு நாடுகளினதும் அவதானத்திற்கு உட்பட்டவைகளாகும்.

மேலும் திருகோணமலை எண்ணெய்தாங்கிகள்அபிவிருத்தி மற்றும்நகரஅபிவிருத்திதிட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் குறித்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. பொருளாதார ரீதியிலான இணைப்புகளை இருநாடுகளுக்கும் இடையில் வலுப்படுத்திக் கொள்வதில் டெல்லி ஆர்வமாக உள்ளது.

இருப்பினும் திட்டங்களை முன்னெடுப்பதில் மந்தகதியான செயல்பாடுகளே காணப்படுகின்றன. இவற்றை சீர் செய்து இலங்கையில் உத்தேசிக்கட்டுள்ள இந்திய திட்டங்களைத் துரிதப்படுத்துவது புதிய இந்திய உயர்ஸ்தானிகராக பொறுப்பேற்கும் சந்தோஷ் ஜா முன்பாக உள்ள இலக்குகளாகும்.

எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இந்தியத் தூதுவராக நியமனம் பெற்ற சந்தோஷ் ஜா, 2019 முதல் ஜுலை 2020 வரை உஸ்பெகிஸ்தானில் இந்தியத் தூதராக பணியாற்றியுள்ளார்.

மேலும் 2017 - 2019 ஆண்டுகளில் வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதுவராகக் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் 2015 - 2017 வரையிலான ஆண்டுகளில் இந்திய வெளிவிவகார அமைச்சின் கொள்கை திட்டமிடல் பிரிவுக்குத் தலைமை தாங்கினார்.

இந்த காலப்பகுதியில், இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய ஈடுபாடுகளுக்கும் சவால்களுக்கும் பதிலளிக்கும் திறன் கொண்ட இராஜதந்திர பிரிவை உருவாக்க பங்களிப்பு செய்திருந்தார்.

குறிப்பாக முக்கிய இந்திய வெளியுறவுக் கொள்கை முன்முயற்சிகளை உருவாக்குவதிலும், பல மூலோபாய உரையாடல் மன்றங்களை நிறுவுவதிலும் நெருக்கமாக செயற்பட்டவராகவே இராஜதந்திரி சந்தோஷ் ஜா காணப்படுகிறார்.

அதே போன்று பூகோள அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மையப்படுத்தி உலகளவில் புகழ்பெற்றரெய்சினாகலந்துரையாடல்களிலும் முக்கிய பங்கை வகித்துள்ளார்.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பான விடயங்களையும் கையாண்டுள்ளார்.

இலங்கையில் இறுதிக்கட்ட போர்இடம்பெற்ற2007தொடக்கம் 2010 ஆண்டு வரையிலான காலப்பகுதியில்கொழும்பில்உள்ள இந்தியாஉயர்ஸ்தானிகராலயத்தில் முதன்மை செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அதனை தொடர்ந்து அமெரிக்க - இந்திய அணுவாயுத பேச்சு குழுவின் உறுப்பினராகவும் பொறுப்புக்களை ஏற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# கடலோர வளங்கள் பாதுகாப்பு முகாமைத்துவம் போன்றவைக்கு ஐந்தாண்டுத் திட்டம் அறிவிப்பு

கடலோர வளங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக ஐந்தாண்டு திட்டம் (2024-2029) வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திட்டம் (2024 - 2029) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களிடம் புதன்கிழமை பத்தரமுல்லைசெத்சிறிபாயவில்உள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் கையளிக்கப்பட்டது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளின்படி, கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களம் கடலோர வளங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கான திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மேலும் மாறிவரும் நிலைமைகளைக் கருத்தில்; கொண்டு ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் திட்டம் புதுப்பிக்கப்பட வேண்டும். கடந்த 2018 ஆம் ஆண்டு இந்த நாட்டில் கரையோர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தைப் புதுப்பித்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (2024-2029) கடலோரவளங்களைப்பாதுகாப்பதற்கும் முகாமைத்துவம்செய்வதற்கும்இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட உள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் அடுத்த ஆண்டுமுதல்கரையோரவளங்களை பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான ஐந்தாண்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கடலோரபாதுகாப்புமற்றும்கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் மேலும் தெரிவித்தது.

எதிர்காலத்தில் கரையோரப் பிரதேசத்தில் கிடைக்கும் உயிரியல் மற்றும் பௌதீக வளங்கள் நாட்டின் அபிவிருத்திக்குபங்களிக்கும்வகையில் நாடு மிகவும் திறம்பட கரையோர சுற்றுச்சூழலை பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் மரபுகளுக்கு அப்பால் சென்று கடல் வளங்களில் இருந்து நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டைச் சூழவுள்ள கடல் மற்றும் கரையோர சூழலை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் இந்தப் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியும் என அமைச்சர் கூறினார். அதற்கான திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் தொடர்பில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா, இலங்கை கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.எஸ்.ரணவக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தால் துணுக்காயில் பதிவு

காணாமல் போனோர் உறவுகளிடமிருந்து மேலதிகமான பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தால் துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இறுதி யுத்த காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் துணுக்காய், ஐயங்குளம், புத்துவெட்டுவான், கோட்டைகட்டியகுளம் பகுதிகளிலிருந்து வருகை தந்து, சாட்சியமளித்து ஆவணங்களை வழங்கியிருந்தனர்.

அவ்வேளை, கருத்து தெரிவித்த காணாமல் போனோரின் உறவுகள் -

தமக்கு இழப்பீடுகள் எதுவும் தேவையில்லை என்றும், காணாமல்போன தமது உறவுகளின் இறப்புச்சான்றிதழ்களைவழங்கஎத்தனிப்பதாகவும் தெரிவித்ததோடு, தமது உறவுகளை திருப்பி அனுப்புமாறு கோரியுள்ளனர்.

அத்துடன், கருத்துத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோருக்கானஅலுவலகர், எமக்குஇதுவரை 21 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 5000 முறைப்பாடுகள் இராணுவ முப்படைகளின் முறைப்பாடுகள். அதிலும் இரட்டிப்பு செய்யப்பட்ட முறைப்பாடுகளாக 15 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. - என்றார்.

மேலும், அவர், இது தொடர்பில் தாம் பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், கிடைத்தவற்றுள் 4786 முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளை தாம் முடித்துள்ளதாகவும், அவற்றில் 3400 விண்ணப்பங்களில் இடைக்கால நிவாரணத்தை பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரியுள்ளனர் எனவும், அவற்றில் 1300 விண்ணப்பங்கள் இழப்பீட்டு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டதற்கான சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் என்பவற்றை உரிய விசாரணைகள் செய்து, உறவுகளை தேடும் மக்களுக்கு வழங்க தமது அலுவலகம் நடவடிக்கைமேற்கொண்டுவருவதாகவும்அவர் தெரிவித்தார். (05)

# மருத்துவ சோதனையில் 250 பேர் தகுதியற்றவர்கள் என்று நீக்கம்

பல்வேறு தவறுகளுக்காக பொலிஸ் திணைக்களம் மற்றும் நீதிமன்றங்களால் கடந்த வருடம் மருத்துவ பரிசோதனைக்காக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட சாரதிகளில் 250 பேர் வாகனம் செலுத்த தகுதியற்றவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் 20 22ஆம் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 3,989 சாரதிகள் பல்வேறு தவறுகளால் மருத்துவ பரிசோதனைக்காக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் அனுப்பப்பட்டனர்.

இவர்களில் 250 பேர் வாகனம் செலுத்துவதற்கு உடல் மற்றும் மனத் தகுதி இல்லாதவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, இவர்கள் வாகனம் செலுத்துவதற்கு மருத்துவ ரீதியாக தகுதியற்றவர்கள்என தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தால் சான்றிதழ் பெற்றுள்ளனர். (05)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முள்ளியவளையில் முற்றுகை



முள்ளியவளை பகுதியில் புதன்கிழமை கஞ்சா வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சட்டவிரோதமாக கசிப்புக்காய்ச்சி விற்பனை செய்யும் இடம் ஒன்று முற்றுகை இடப்பட்டு பெருமளவான பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் இரகசியமான முறையில் கசிப்பு காய்ச்சி வெளியிடங்களுக்கு விநியோகித்து வருவதாக பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த இடம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது 9 பீப்பாய்கள் மற்றும் கசிப்புக் காய்ச்ச பயன்படுத்தப்படும் பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இவை மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் அமுல்

*யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகரித்த பார்வையாளர்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல்கள், திருட்டுச் சம்பவங்கள், நோய்த் தொற்றுக்கள், நோயாளர் பராமரிப்பில் இடையூறுகள் என்பன ஏற்படுவதன் காரணமாக செவ்வாய்கிழமை தொடக்கம் பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.*

*அதாவது ஒரு நோயாளருக்கு தலா இரு அனுமதிப்பத்திரம் எனும் அடிப்படையில் நோயாளரை அனுமதிக்கும் பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும்.*

*சிறப்பான நோய்ப்பராமரிப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த ஒழுங்கு முறைக்கு அனைத்து பார்வையாளர்களும் ஒத்துழைப்பை வழங்கும்படி கோரப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்திஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்களின் விவரம் வெளியானது

## பொலிஸாரால் முடக்கப்பட்டவை

நாடளாவிய ரீதியல் தற்போது முன்னெடுக்கப்படும் 'ஆபரேஷன் யுக்தி' யுடன் இணைந்து, சட்டவிரோத சொத்துக்கள் மற்றும்சொத்துப்புலனாய்வுப்பிரிவின் அதிகாரிகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் முன்னணி போதைப்பொருள் கடத்தல்காரர்களான குடு அசங்க, லடியா மற்றும் குடு ஸ்ரீயானி ஆகியோர் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த ஏராளமான பணம் மற்றும் சொத்துக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

சொத்துக்கள் மற்றும் பணம் என்பனகைப்பற்றப்பட்டுபொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

3 பஸ்கள், 2 கார்கள், 2 மோட்டார் சைக்கிள்கள், மூன்று மாடி வீடு உட்பட 4 காணி, 50 பவுண் தங்கம், பணம் 123,000 மேற்கண்ட தடை செய்யப்பட்ட சொத்து மற்றும் பணத்தின் மதிப்பு சுமார் 920 லட்சம் எனத் தெரியவந்துள்ளது.

(05)



# கடுவெல மாநகர சபை களஞ்சியசாலையில் 34 ரயர்களை திருட்டு; 3 ஊழியர்கள் கைது

*கடுவெல மாநகர சபையின் அத்துருகிரிய வல்கம உப காரியாலயத்தின் களஞ்சியசாலையில் 23 லட்சம் ரூபா பெறுமதியான 34 ரயர்களை திருடிய குறித்த அலுவலகத்தின் ஊழியர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர் என அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.*

*இது தொடர்பில் கிடைக்கப்பெற்றவிசாரணையின் பின்னர், நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் 3 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உப அலுவலக களஞ்சியசாலையில் 34 ரயர்கள் திருடப்பட்டுள்ளன.*

*இது தொடர்பாக வல்கம உப காரியாலயத்துக்குப் பொறுப்பான அதிகாரி செய்த முறைப்பாட்டின்அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*(05)*

# வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் கடலில் விடப்பட்டன ஆமைக் குஞ்சுகள்



கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்த ஆமைக் குஞ்சுகள் புதன்கிழமை மாலை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் கடலில் விடுவிக்கப்பட்டன.

புத்தளம் கற்பிட்டி கண்டகுழி கடற்கரையில் ஆமைகளால் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்து குஞ்சு பொரித்த பின்னர் அவை கடற்கரையில் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கடந்த மாதம் ஆமை முட்டைகளை சேகரித்துபராமரிப்புநிலையத்தில் வைக்கப்பட்டு 45 நாள்களின் பின்னர் முட்டையிலிருந்து 27 ஆமைக் குஞ்சுகள் வெளியில் வந்தன என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது, புதன்கிழமை மாலை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆமைப் பராமரிப்பு நிலையத்திற்குச்சென்று குறித்த 27 ஆமைக் குஞ்சுகளை பாதுகாப்பாக கடலில் விட்டனர்.

குறித்த கடலாமை அரிய-வகையானமஞ்சள்நிறச்சிற்றாமை வகையைச் சேர்ந்தது என கற்பிட்டி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (05)

# பிரிட்டனில் இலங்கை மாணவன் காரால் மோதப்பட்டு உயிரிழப்பு

இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்கும் இலங்கை மாணவர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

31 வயதான ஓத ஜயசுந்தர என்ற பல்கலை மாணவர் வீதியில் சென்று கொண்டிருந்த போது வேகமாக வந்த கார் ஒன்றால் மோதப்பட்டு சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 27 வயதான காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir




# சைவ வழிபாட்டு மரபுகள்

உலகில் மேலோங்கி நிற்கும் சமயங்களில் முதன்மையான சமயமாக சைவ சமயம் காணப்படுகின்றது. சைவ சமயத்தின் முழு முதற் கடவுள் சிவபெருமான் என்று சைவ மக்களால் வழிபட்டு வருகின்றது.

இவ்வாறாக ஒவ்வொரு தெய்வங்களையும் அவற்றிற்குரிய தொழில்களையும் சைவ வழிபாடு காட்டி நிற்கின்றது. வழிபாடு என்பது இறைவனிடம் எம்முடைய துன்பம் நீங்க வேண்டுவதும் உடலில் தூய்மையோடு இறைவனை மனதில் நினைத்தலும் எனலாம். சைவ வழிபாடு என்று பார்க்கும் வேளையிலே சைவ மக்களால் எந்தவொரு காரியம் செய்யத் தொடங்கினாலும் இறைவனையே முன்னிறுத்தி செய்வது வழக்கம். சைவ மக்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் இன்றியமையாத ஒன்றாக விளங்குவது சைவவழிபாடு ஆகவே காணப்படுகின்றது.

சைவசமயம் முதற் சமயமாக மேலோங்கி இருப்பதற்கு பெரிதும் பங்காற்றிய முக்கிய காரணியாக வழிபாட்டு மரபுகளைக் குறிப்பிடலாம். மேலும் மரபுகள் பற்றி நோக்குவோமாயின் ஒவ்வொரு மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை சைவசமய வழிபாட்டு மரபகள் காணப்படுகின்றன. பெரியோர்கள், சித்தர்களால் எழுதப்பட்ட புராணங்கள் மற்றும் நூல்கள் மூலமாக வழிபாட்டு மரபுகளின் முக்கியத்துவத்தை எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆரம்ப காலத்தில் கிராமப் புறங்களில் சைவ வழிபாட்டு மரபுகள் பற்றி நேரடியாக பார்க்கக் கூடிய வகையில் காணப்பட்டன.



தற்காலத்தில் வழிபாட்டு மரபுகள் காணப்பட்டாலும் கூட ஆதிகால வழிபாட்டு முறைகள் மிகவும் பிரசித்தமாகக் காணப்பட்டன. சைவசமயி ஆகிய ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏதோ ஒருவகையில் வழிபாட்டு மரபுகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

வுழிபாட்டு முறையின் மரபுகள் என்று நோக்கும் பொழுது ஆகமம் சார் வழிபாடு, ஆகமம் சாரா வழிபாடு என்று இரண்டு பார்வையில் நோக்க முடியும். ஆகமம் சார் வழிபாடு என்று பார்க்கும் வேளையில் முறைப்படி பூசகர்களைக் கொண்டு வழிபாடுகளை மேற்கொள்வதும் ஆகமம் சாரா வழிபாடு கிராமியத் தெய்வ வழிபாடு என்றும் குறிப்பிடலாம்.



இவ்வாறாக வழிபாட்டு முறைகளைக் காண முடிகின்றது. மேலும் வழிபாட்டு மரபுகள் என்று நோக்கும் பொழுது தெய்வங்களும் பலவாறு மரபுகள் அடிப்படையில் காணப் பட்டன. கிராமியத் தெய் வங்கள், ஊர்த் தெய்வங்கள் காவல் தெய்வங்களாகவும் மதுரைவீரன், காளி, ஐயனார் போன்றோரை வழிபட்டனர். மண்ணுற தெய்வம், இடைநிலைத் தெய்வம், விண்ணுற தெய்வம் என்றும் வழிபட்ட மரபு முறை தெய்வங்கள், காவல் தெய்வங்கள் என்று பலவாறும் ஆண் தெய்வம், பெண் தெய்வம் என்றும் பாகுபடுத்தி மரபுகளின் அடிப் படையில் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

ஆலயங்களிலே கும்பாவிசேகம் செய்தல், ஆறுகாலப் பூசைகளை நடாத்ததல், வருடம்தோறும் திருவிழாக்களை நடாத்துதல் போன்ற விடயங்கள் மரபுசார் அடிப்படையிலே மேற் கொள்ளப்பட்ட வழிபாட்டு மரபுகள் ஆகும். ஆகமம் என்பதன் பொருளாக 'ஆ' என்பது பாசத்தையும் 'க' என்பது பசுவையும் 'ம' என்பது பதியையும் குறித்து நிற்கின்றது. இவ்வாறு சைவ வழிபாட்டு மரபுகளைக் காணலாம். வழிபாடு சிவ வழிபாடு, சூரிய வழிபாடு, அக்கினி வழிபாடு என்றும் காணப்படுகின்றது. ஆதிகால வழிபாட்டு மரபுகள் என்று நோக்கினால் மரம், தடி, தீ, காற்று, வானம் என்பவற்றையே கடவுளாக வழிபடும் முறைகள் காணப்பட்டன. ஆண் காணப்படுகின்றது.

சாயங்காலம், இடைக் காலம், அர்த்தசாமம் என்று ஆறுகாலப் பூசைகள் மேற்கொள்ளப்பட்டன. சங்ககாலங்களில் தெய்வங்களையே எல்லாவற்றிற்கும் முதன்மையாகக் கொண்டிருந்தனர். இரண்டு ஒழுக்கங்கள் காணப்பட்டன. அக ஒழுக்கம், புற ஒழுக்கம் என்பனவாகும். பெரும்பாலும் சங்ககாலம் அக இலக்கியங்களைப் பற்றி பாடியிருந்தாலும் கூட புற இலக்கியங்களும் பாடப்பட்ட அவை போர், வீர ஒழுக்கம் பற்றியே பாடப்பட்டன. போர்களுக்கு கடவுளே எல்லாம் என்பது மக்களுடைய கொள்கையாகக் காணப்பட்டது. இதனால் ஆரம்ப காலத்தில் சைவவழிபாட்டு மரபுகள் மேலோங்கி இருந்தமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் நாவுக்கரசர், சம்பந்தர், அப்பர் போன்ற சைவசமயக் குரவர்கள் செய்த பணிகள் அல்லது தொண்டுகளை நோக்கினால் கூட அவற்றில் சைவசமய வழிபாட்டு மரபுகளைக் காணலாம். சைவசமயம் மோலோங்கியமைக்கு காரணமான இம்மரபுகள் இன்றும் கூட காண முடிகின்றது.

கிறி ஸ்தவ சமயம் மேலோங்கியிருந்தமையால் சைவசமயம் வீழ்ச்சியுற்றது. நாட்கள் செல்ல நலிவுற்றது.

நலிவுற்ற சைவசமயத்தை மேலோங்க மீண்டும் துளிர்விடச்செய்த முதற் பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும். நலிவுற்றிருந்த சமயத்தை தழைக்கச் செய்து வழிபாட்டு மரபுகள் மூலமாக மக்கள் மத்தியிலே சைவசமயம் பற்றிய நம்பிக்கையை விதைத்து உயிர் கொடுத்தவர் இவராவார். இன்றும் சைவசமயம் முதன்மைச் சமயமாக போற்றப்பட்டு இருக்கிறதென்றால் அது மக்கள் மத்தியில் சைவ சமய மரபுகள் பற்றிய நம்பிக்கையே என்று கூறலாம். வழிபாட்டு முறைகள் சமயம் அனைத்திற்கும் காணப்பட்டாலும் கூட சைவசமய மக்கள் வழிபாட்டு மரபுகள் மிகவும் சிறப்பானவையாகும்.

சைவசமய வழிபாட்டு மரபுகளின் அடிப்படையில் சைவசமயி ஒருவர் ஒரு ஆண் கோவிலுக்குச் செல்லும் போது வேஷ்டி அணிந்திருக்க வேண்டும். உடலின் மேற்பகுதியிலுள்ள ஆடையை நீக்கிவிட்டு கோவிலுக்குள் செல்ல வேண்டும் என்பது ஒரு சைவ வழிபாட்டு மரபாகும். (ஆண்கள் சேட் அணிய கூடாது என்பது) இன்றும் கூட ஆலயங்களில் காண முடிகின்றது. நல்லூர், தொன்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் போன்றன ஒரு சில உதாரணங்களாகும். அவ்வாறே பெண்கள் எவ்வாறு கோவில் செல்ல வெண்டும் என்பதும் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற சைவசமய வழிபாட்டு முறைகள் அல்லது மரபுகள் ஆகும்.

இவ்வாறாக சைவசமய வழிபாட்டு மரபுகள் காலாகாலமாக பின்பற்றப்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்து நோக்குவதன் மூலம் சைவசமய வழிபாட்டு மரபு முறைகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

க. டர்சிகா
A/L 2024, மேற்பிரிவு, யா/ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

# பிறப்பே எடுக்காத சிவபெருமான் பிறந்த நட்சத்திரம்

தமிழ் மொழியில் திருவாதிரை என்று கூறப்படும் நட்சத்திரத்திற்கு வடமொழியில் ஆர்த்ரா என்று பெயர். இதுவே ஆருத்ரா எனப்படுகிறது. மார்கழி மாத திருவாதிரை நட்சத்தி நாளில் எல்லா சிவாலயங்களில் ஆருத்ரா தரிசனம் சிறப்பாக நடை பெறும்.

பிறவா யாக்கைப் பெற்றோன் பெரியோன்என்று சங்க இலக்கியமான சிலப்பதிகாரம் சிவ பெருமானைக் குறிக்கிறது.

சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனது பற்றி புராணச் செய்திகள் உள்ளன. சேந்தனார் வீட்டுக்கு களியுண்ண நடராஜப் பெருமான் வந்த அந்த தினம், ஒரு மார்கழி மாத திருவாதிரை நாள் இதை உணர்த்தும் வகையில், இன்றும் ஆதிரை நாளில் தில்லை நடராஜப் பெருமானுக்கு களி படைக்கப் படுகிறது. இதனால் சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனது. ஒரு காலத்தில், திரேதாயுகா என்ற பெண் பார்வதி தேவியின் தீவிர பக்தையாக இருந்தாள்.

திரேதாயுகாவுக்குத் திருமணம் நடந்தது. அக்காலத்தில் திருமணமான நான்காவது நாளில் தான் சாந்தி முகூர்த்தம் நடக்கும். ஆனால், திருமணமான மூன்றாவது நாளிலேயே திரேதாயுகாவின் கணவன் இறந்து விட்டான்.

திரேதாயுகா அலறித் துடித்து பார்வதி தேவியே உன் பக்தையான என்னை இப்படி சோதிக்கலாமா, உன்னை இவ்வளவு காலம் வணங்கி என்ன பயன் என்று கூறிக் கதறி அழுதாள். அப்போது கயிலாயத்தில் சிவன் அருகில் அமர்ந்திருந்த பார்வதி, திரேதாயுகாவின் அலறலைக் கேட்டு அவள் கணவனுக்கு உயிர்ப் பிச்சையளிக்க சபதம் செய்தாள். அவளது சபதத்தைக் கேட்டு அதிர்ந்து போன சிவன் உடனே எமலோகத்தை ஒரு பார்வை பார்த்தார்.



இதைக் கண்டு பதறிப்போன எமன் திரேதாயுகாவின் கணவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார். அதன் பின் பார்வதியும் பரமசிவனும் திரேதாயுகாவுக்கும் அவள் கணவனுக்கும் தரிசன காட்சி கொடுத்து ஆசீர்வதித்தார்கள். இந்த நிகழ்ச்சி ஒரு மார்கழி மாத திருவாதிரை நட்சத்திர நாளில் நடந்தது. இந்த தரிசனத்துக்கு ஆருத்ரா தரிசனம் என்று பெயர் ஏற்பட்டது சேந்தனாருக்கும் திரேதாயுகாவுக்கும் நேரில் தோன்றி தரிசனம் தந்த அந்த திருவாதிரை நட்சத்திர நளையே சிவபெருமானாரின்நட்சத்திரமாக அதாவது ஆருத்ரா தரிசனமாக கொண்டாடப்படுகிறது.

சிவபெருமான் நெருப்பு உருவமாக தன்னை வெளிப்படுத்திக் காட்டியது சிவராத்திரி நன்னாள். சுவாமி தான் இப்பூமியில் ஆவிர்பரித்து நின்ற (தோற்றுவித்த) நாள் ஆருத்ரா நன்னாள். சிவராத்திரியன்று அவரை வழிபட்டால் பலன். ஆருத்ராவன்று தரிசித்தாலே பலன் ஆகும்.

வைகாசிக்குன்றிலிருந்து இ நாதன் குருக்கள், சிட்னி

# காலத்தின் கட்டாயம்..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்பாண நகரத்திற்கு வெளியே வாழும் பிற தமிழர்களை வைத்து நோக்கும்போது, யாழ் வெள்ளாளர்கள் கொம்புடன்தான் பிறந்திருந்தார்கள். இன்னமும் பிறக்கிறார்கள்.

யாழ்பாண தமிழர்கள் தங்களை விடவும் உயர்ந்தவர்கள் என்று நாட்டின் பிற பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களும் உண்மை என்றே நம்பினார்கள். அதுவே. இந்தப் பிரச்சினையின் அடிக்கால். கிழக்கு மாகாண தமிழர்களும் அந்தைய நாள் முஸ்லீம் இனத்தவர்களும் தங்களை தமிழ் மொழி பேசுவோரிடையே இரண்டாம் தர மக்களாகவே மட்டம் தட்டிக்கொண்டனர்.

இதில் அதிர்ச்சி தரும் விடயம் எனன வென்றால். இப்போதும் 'யாழ் தமிழர்கள்' என்று மார்தட்டிக்கொள்ளும் பலர், தீபகற்பத்தில் உள்ள தீவு மக்களை, தங்களில் ஒருவராகக் கருதி, பெண் கொடுத்து, பெண் எடுக்கிறார்கள் இல்லை. அவ்வாறு செய்வதாயின் அது தங்களுக்குத் தரம் தாழ்ந்த செயல் என்றே அவர்களில் பலரும் கருதுகிறார்கள். கிழக்கு மாகணத்தவர்கள் என்றால், அது இன்னமும் இளப்பம்.

ஏன், தற்போது தமிழ் அரசு கட்சியின் தலைவர் தேர்தலில்கூட கிழக்கு மாகாணம் உதாசீனப்படுத்தப்படுகிறது என்ற ஒரே காரணத்தை முன்னிறுத்தி, யோகேஸ்வரன் போட்டியிடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போதைய தலைமுறையின் பெருந்தலைவர் என்று கூறப்படும் சம்மந்தனையே நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடித்த பெருமை, வட மாகாண வாக்களர்களுக்கு உண்டு. காரணம், அவர் கிழக்கு மாகாணத்தவர் என்பது மட்டுமே.

### மீசையில் மண் ஒட்டவில்லை

இந்த சிக்கலான பின்னணியில், கில்மிஷாவிற்கு கிடைத்துள்ள அங்கீகாரம், தனி நபர், அதிலும் ஒரு சிறுமி என்பதையும் தாண்டிச் செல்கிறது. அதனையும் தாண்டி ஒரு செய்தி உள்ளது. இனப்பிரச்சினை அரசியலை முன்னிறுத்தி தங்களது வாழ்க்கையை முன்னெடுத்துச்சென்றதற்போதையமூத்தோர், தங்களுடைய கால்களின் அடியிலேயே, இளைய தலைமுறையினரின் வாழ்க்கை குறித்த புதிய எண்ணவோட்டங்களைப் புரிந்துகொள்ளவேண்டும்.

அந்தப் பெரிசுகள், தங்களது தலைகளை மண்ணில் புதைத்துக்கொண்டு, உலக நடப்புகள் குறித்து அறியாமலே வாழ்ந்து வருகிறார்கள் எனலாம். அதைவிட முக்கியம் தங்களது குடும்பங்களில் உள்ள பேரன் பேத்திகள் என்ன நினைக்கிறார்கள் என்ற சுற்றறிவு அவர்களுக்கு அறவே இல்லை. எனவே, காலம் தப்பும் முன், தங்களது அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து முடிவுகள் எடுக்கும் முன்னர் இளைய தலைமுறையினரின் எண்ணவோட்டத்தை அறிந்து, புரிந்து, அதனை ஏற்றுக்கொண்டு அவர்கள் செயல்படுவதில்லை. ஆனால் அதுவே காலத்தின் கட்டாயம்.

அண்மை காலத்தில், நீதிபதி சரவணராஜா விவகாரத்தில், அனைத்துதமிழ்க்கட்சியினரும் ஒருங்கிணைந்து குரல் கொடுத்த கடையடைப்பு போராட்டம் படுதோல்வி அடைந்ததற்கு இந்த புரியாமையும் தலைமுறை இடைவெளியுமே காரணம். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற வகையில் அவர்கள் பின்னர் அழைப்பு விடுத்த மனித சங்கிலிப் போராட்டமும் தோல்வியில் முடிந்தது.

காரணம், இளைய தலைமுறை தமிழர்களுக்குத் தங்களது பழுத்து பழுத்து, புளித்துப்போன அரசியல் தலைமைகள் மீது நம்பிக்கை இல்லை. அவர்களில் எவருமே நேரடி அரசியலில் ஈடுபடத் தயாராக இல்லை. தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்று உலா வருபவர்களில் ஒருவர்கூட அரசியலில் நேரடியாகப் பங்குபெறுவார் இல்லை.

தனிமனித உணர்வுகளுக்கு அப்பால், பத்திரிகை தொழில் அவர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பு மட்டுமே. அந்த துறையில் தனித்துவத்துடன் முன்னிலையில் நிற்க வேண்டும் எனபதே அவர்களில் பலரது எண்ணவோட்டமும். அவர்களில் யாருடைய நாடியை பிடித்துப்பார்த்தாலும், லண்டனில் பிபிசி தமிழ் சேவையில் வேலை செய்வதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு செயலாற்றி வருகிறார்கள் என்றே கருதவேண்டி உள்ளது.

அதேசமயம், கில்மிாவின் தலைமுறையும் அவர்களைவிடப் பத்து-பதினைந்து வயது அதிகமானவர்களும்கூட அரசியல்-சமூக பிரக்ஞைகளை இழந்து, அல்லது முற்றிலும் மறந்துவிட்டு, தங்களுக்கான வாழ்வையும் வழிமுறைகளையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். சுற்றிலும் பார்த்தால், அனைவராலும் அறியப்பட்ட கில்மிா போலவே, பிற சிறுவர்களும் சிறுமிகளும் புதிய வாழ்க்கையை தேடி செல்லத் தொடங்கி இருக்கிறார்கள்.

அவர்களுடைய தலைமுறையினர் இனப்பிரச்சினை மற்றும் இனப்போர் குறித்து அறியாமலே பிறந்தவர்கள். அவர்களுக்கு முந்தைய தலைமுறையினரின் உணர்வோ அல்லது அவர்களது தியாகம் குறித்த வரலாறோ தெரியாது. அவர்களுக்கு அது குறித்து அறிந்து கொள்ள ஆர்வம்கூட இருக்காது. காரணம், இனப்போர் விழுமியத்தின் விளைவுகளை அவர்கள் இன்னமும் கண்கூடாக அவதானித்து வருகிறார்கள். தற்போதைய அரசியல் தலைமைகள் குறித்து ஒவ்வொருவருடைய வீடுகளிலும் நடைபெறும் விவாதங்களையும் நாளாந்தம் உற்று நோக்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

கில்மிஷாவிற்குதமிழ்நாட்டில்கிடைத்துள்ள மரியாதை போற்றுவதற்குரியது. அவருக்கு முன்னரே ஒரு இலங்கைத் தமிழருக்கு இந்திய அரசின் நடிப்பிற்கான உயரிய சிறப்பு பரிசே கிடைத்துள்ளது நினைவுகூரத்தக்கது. தனுஷ் நடித்து, வெற்றிமாறன் இயக்கத்தில் 2011ஆம் ஆண்டு வெளிவந்த 'ஆடுகளம்' திரைப்படத்தில் பேட்டைகாரன் கதாபாத்திரத்தில் தோன்றிய கவிஞர் ஜெயபாலனுக்கு இந்திய அரசின் சிறப்புப் பரிசு கிடைத்தது. தற்போது, ஜெயபாலனிடமிருந்து இரண்டு தலைமுறை தாண்டிய சிறுமி கில்மிஷாவிற்கும் சிறந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இருவரின் தலைமுறை இடைவெளியில் இருக்கும் சமகால அரசியல் சரித்திரம் வேறு. ஏன், அது வேறுவேறும்கூட.

# சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அதிபர் நியமனங்கள் அமையும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



அதிபர் நியமனங்களில் தவறுகள் அல்லது முறைகேடுகள் நடைபெற்றிருக்குமாயின் அதுதொடர்பாக ஆராய்ந்து, அவை நிவர்த்திக்கப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச சுற்று நிரூபங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நியமனங்களில் தலையிடுவது, மக்களுக்கு செய்கின்ற அநீதியாக அமைந்து விடும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம் பெற்றுக் கொண்டவர்களுள் ஒரு பகுதியினர் நேற்று (வியாழக்கிழமை) சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக அதிபர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களில் ஒரு பகுதியினர் வெளி மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே ஆசிரியர்களாக வெளி மாவட்டங்களில் கடமையாற்றி இருக்கின்றமை உட்பட பல்வேறு காரணங்களை முன்வைப்பதுடன், தம்மைசொந்தமாவட்டங்களில்கடமையாற்ற சந்தர்ப்பம் அளிக்குமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

குறித்த கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிபர்களின் கருத்துக்களையும் ஆதங்கங்களையும் கேட்டறிந்த அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, குறித்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபித்ததுடன், நியமனங்கள் அனைத்தும் நியாயமானதாகவும் சுற்று நிரூபங்களுக்கு அமைவானதாகவும் இருக்க வேண்டும்என்பதைவலியுறுத்தினார். மேலும், மனிதாபிமான கார ணங்களையும் பரிசீலிக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெள்ளம் பாதித்த கிளிநொச்சி மக்களுக்கு இலங்கையின் முன்னாள் வர்த்தகர்கள் உதவி

## சிறிதரன் எம்.பியின் கோரிக்கைக்கிணங்க





கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தினரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்த வேண்டுகோளுக்கு இணங்க இலங்கை முன்னாள்வர்த்தகர்கள்சங்கம்-கனடாஉறுப்பினர்கள் அனைவரும் இணைந்து 5 லட்சம் ரூபா பண உதவிகளை செய்து வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து கிளிநொச்சி பெரியகுளம் ஐயனார் பாடசாலையில் தங்கி இருந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி ஆகியோர் நேரடியாகசென்றுஇந்தஉலர்உணவுப்பொருள்களை வழங்கி வைத்தனர். (05)

# ஜனாதிபதி விக்ரமசிங்க வெற்றிபெறவே மாட்டார்


## அடித்துக்கூறுகிறார் உதயங்க வீரதுங்க

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற மாட்டார்என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்டோனியாவில் இருந்து இலங்கைக்கு நேரடி விமானம் ஒன்று புதன்கிழமை முதல் முறையாக இயக்கப்பட்டது. அதன்படி 117 பயணிகளுடன் விமானம் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமான சேவை குறித்து கருத்து வெளியிட்டுள்ள உதயங்க வீரதுங்க, வாரத்திற்கு 05 விமானங்கள் மூலம் 06 நாடுகளைச் சேர்ந்த 16,500 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என்றும் இதனால் 25 மில்லியன் டொலர்கள் எதிர்பார்க்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.( 05)



# உச்சத்தைத் தொட்டது வெங்காயத்தின் விலை

நேற்றைய தினம் கொழும்பு, புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை 520 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்தியா வெங்காய இறக்குமதிக்குத் தடை விதித்துள்ள நிலையில், பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளமையேகுறித்தவிலைஅதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் சில்லரை விலை, 700 ரூபாவைத் தாண்டும் எனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, நேற்றைய தினம் பல சில்லறை விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 600 முதல் 650 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இறந்தவருக்கு ஒட்சிசன் கொடுக்கிறார் ரணில்

## சபா. குகதாஸ் சாட்டை




ஜனாதிபதியின்பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் இலங்கையைப் பொறுத்தவரை இறந்த உடலுக்கு ஒட்சிசன் கொடுக்கும்செயற்பாடுஎனவடக்குமாகாணசபையின்முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளார்.

உண்மையில் ஜனாதிபதி கூறிய மூலோபாய திட்டங்கள் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கானது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவை அரசியல் அமைதி உடைய, ஊழல் அற்ற ஆட்சியாளர்களைக்; கொண்ட நாடுகளுக்கே பொருத்தமானதுஎன்றும்சபா.குகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தலைகீழாக கிடைக்கும் பொருளாதாரத்தை நிமிர்த்த முதலில் இனப் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல்தீர்வைவழங்கும்அதேநேரம் ஊழல் வாதிகளைத் தண்டிக்க வேண்டும்என்றும் குறிப்பிட்டுள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2023இல் வெளியிடப்பெற்றது.